முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டு தொழினுட்பவியலாளர் கழகம்

## மட்டம் II பரீட்சை – 2021 சனவரி

## (204) வணிக முகாமைத்துவம்

(Business Management)

2021-03-21
பிற்பகல்
[1.45 – 5.00]

பக்கங்கள் : 06
வினாக்கள் : 07

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்)**:**

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) ***விடைகள்*** *உமக்கு வழங்கப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *மாத்திரம் எழுதப்படல் வேண்டும்.*

(4) *நீர் எடுகோள்கள் எதனையும் எடுத்திருப்பின் அவற்றை தெளிவாக குறிப்பிடுக.*

(5) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(6) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

**நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)**

(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 01

*இல. **1.1** தொடக்கம் **1.5** வரையான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்க. தெரிவு செய்த விடையின் இலக்கத்தை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமக்குத் தரப்பட்ட விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.1** முகாமைச் செயன்முறையின் பிரதான தொழிற்பாடுகளாக (functions) இருப்பவை:

(1) திட்டமிடல், கட்டளையின் ஓரினத்தன்மை, ஊக்கப்படுத்தல், வழிநடத்தல்

(2) திட்டமிடல், ஒழுங்கமைத்தல், வழிநடத்தல், கட்டுப்படுத்தல்

(3) திட்டமிடல், தீர்மானமெடுத்தல், தொடர்பாடல், வழிநடத்தல்

(4) திட்டமிடல், பயனுறுதித்தன்மை, வினைத்திறன், உற்பத்தித்திறன்

**1.2** பின்வருவனவற்றுள் திட்டமிடல் கோட்பாடு (principle of planning) **அல்லாதது** எது?

(1) நெகிழ்வுத்தன்மைக் கோட்பாடு (2) அணி வேலைக் கோட்பாடு

(3) செல்வாக்குக் கோட்பாடு (4) சிக்கல் கோட்பாடு

**1.3** போட்டரின் பெறுமதிச் சங்கிலியில் (Porter's Value Chain) உள்ள ஒரு துணை (support) நடவடிக்கை :

(1) செயற்பாடுகள் (2) நிறுவன உட்கட்டமைப்பு

(3) உள்வரும் வழங்கல்கள் (logistics) (4) சேவை

**1.4** பின்வருவனவற்றுள் வெகுமதிகளைத் (rewards) தீர்மானிக்கும் உள்ளகக் காரணி எது?

(1) தொழிற் சந்தை நிலைமைகள் (2) வேலையின் பெறுமதி

(3) வாழ்க்கைச் செலவு (4) அரசாங்கத்தின் கொள்கை

**1.5** கீழ்வருவனவற்றைக் கவனத்தில் கொள்க :

**(a)** வீட்டிலிருந்து வேலை செய்தல்

**(b)** ஊழியர்களை வெளிமூலமிடுதல் (outsourcing)

**(c)** வேலை வாழ்க்கைச் சமநிலை

மேலுள்ளவற்றில், மனித வள முகாமையின் சரியான புத்தாக்கமாக / புத்தாக்கங்களாக (innovation/s) காணப்படுபவை :

(1) **(a)** மாத்திரம். (2) **(a)** யும் **(b)** யும் மாத்திரம்.

(3) **(a)** யும் **(c)** யும் மாத்திரம் (4) மேலுள்ள யாவும்.

(02 புள்ளிகள் வீதம், 10 புள்ளிகள்)

***1.6** முதல் **1.10** வரையுள்ள வினாக்களின் இடைவெளிகளை நிரப்புவதற்கு அடைப்புக்குள் தரப்பட்டுள்ள சொல் / சொற்களிலிருந்து சரியானதைத் தெரிவுசெய்க. தெரிவுசெய்யப்பட்ட சொல் / சொற்களை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.6** நிறுவன கலாசாரத்தை, நிறுவனத் தந்திரோபாயம் மீது செல்வாக்குச் செலுத்துகின்ற ....................... *(உள்வாரியான / வெளிவாரியான)* காரணிகளில் ஒன்றாக இனங்காண முடியும்.

**1.7** ....................... *(அதிகாரம் / பொறுப்பு)* மேலிருந்து கீழ்நோக்கிப் பாய்கிறது.

**1.8** ஊழியர் ஒருவரின்....................... *(வளர்ச்சி / அங்கீகாரம்)* ஆனது தேவைக் கூம்பகக் கோட்பாட்டின் கௌரவத் தேவைக்கான (esteem need) ஓர் உதாரணமாகும்.

**1.9** ....................... *(தெரிவு செய்தல் / தொழிலுக்கு அறிமுகப்படுத்தல்)* என்பது புதிய ஊழியர்களை நிறுவனத்திற்கு அறிமுகப்படுத்தி நெருக்கமாக்குகின்ற ஒரு செயன்முறை ஆகும்.

**1.10** ....................... *(கல்வித் தகைமை / ஆற்ற வேண்டிய பிரதான கடமைகள்)* என்பது வேலை விபரணத்தின் (JD) ஒரு கூறு (element) ஆகும். (01 புள்ளி வீதம், 05 புள்ளிகள்)

***1.11** முதல் **1.15** வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு உமது விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.11** குழுவாகச் சேர்ந்து தீர்மானமெடுப்பதில் உள்ள இரண்டு (02) அனுகூலங்களைப் பட்டியலிடுக.

**1.12** வழங்கல் சங்கிலி முகாமைத்துவத்தின் இரண்டு (02) கூறுகளை (elements) பட்டியலிடுக.

**1.13** மனித வள முகாமைத்துவத்தின் (HRM) இரண்டு (02) நோக்கங்களைக் (objectives) கூறுக.

**1.14** ஒரு நிறுவனத்திலுள்ள ஊழியர்களது மனக்குறைகளுக்கான இரண்டு (02) காரணங்களைக் கூறுக.

**1.15** வணிகச் செயன்முறை மீள்பொறிமுறைப்படுத்தலின் (BPR) பண்புகள் (characteristics) இரண்டைக் (02) கூறுக. (02 புள்ளிகள் வீதம், 10 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி A நிறைவு*

## பகுதி B

(மொத்தம் 50 புள்ளிகள்)

### வினா 02

வணிகச் சூழல் மிகவும் கொந்தளிப்பானது. எனவே ஒவ்வொரு வணிக நிறுவனமும் மாறும் சூழலிலுள்ள மாற்றங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. இதனால் சவால்களை எதிர்கொள்ளும் பொருட்டு முகாமையாளர்கள் தமது சிந்தனையில் புதுமைகளைக் கொண்டு வருதல் வேண்டும். பல ஆண்டுகளாக வணிகச் சூழலில் நிகழும் சமூக, கலாசார, அரசியல் மற்றும் பொருளாதார மாற்றங்களுக்கு ஏற்ப முகாமைத்துவச் சிந்தனை தொடர்ந்து மாறுகிறது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) அதிகாரத்துவ (Bureaucratic) முகாமைக் கோட்பாட்டின் பண்புகள் (characteristics) மூன்றினைக் (03) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) ஒரு முகாமையாளருக்குத் தேவையான மூன்று (03) திறன்களை (skills) **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(c) கோவிட் – 19 உலகளாவிய நோய்ப் பரவல் காரணமாக வெளிப்பட்டுள்ள முகாமைத்துவத்தின் இரண்டு (02) புதிய போக்குகளை (trends) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 03

**வரையறுக்கப்பட்ட XYZ கம்பனியின்** உற்பத்தி முகாமையாளர் திட்டமிடல் பயனற்றது என வாதிட்டிருந்தார். ஏனெனில், கடந்த சில ஆண்டுகளில் அவர்கள் உருவாக்கிய அனைத்துத் திட்டங்களும் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேற்றினை அடையவில்லை. தொடர்புடைய அனைத்துக் காரணிகளையும் பகுப்பாய்வு செய்வதன் மூலம் அனைத்துத் திட்டங்களும் யதார்த்தமான முறையில் உருவாக்கப்பட வேண்டும் என **வரையறுக்கப் பட்ட XYZ கம்பனியின்** CEO முகாமைத்துவக் கூட்டத்தில் ஆலோசனை வழங்கியுள்ளதுடன் தீர்மானம் எடுத்தலும் மிகவும் பகுத்தறிவுடையதாக (rational) இருக்க வேண்டும் எனப் பரிந்துரைத்துள்ளார்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) பகுத்தறிவான தீர்மானம் எடுத்தல் செயன்முறையின் படிமுறைகளைக் (steps) **கூறுக.** (03 புள்ளிகள்)

(b) நிறுவனமொன்றிற்கு திட்டமிடல் ஏன் முக்கியமானது என்பதற்கான மூன்று (03) காரணங்களை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(c) **வரையறுக்கப்பட்ட XYZ கம்பனியின்** உற்பத்தி முகாமையாளரால் உருவாக்கப்பட்ட திட்டங்கள் தோல்வியடைந்தமைக்கு சாத்தியமானதாக இருக்கக்கூடிய இரண்டு (02) காரணங்களைக் **கூறுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

தொழிற்பாட்டு முகாமைத்துவம் (Operations Management) என்பது நிறுவனத்தின் முக்கியமான செயற்பாடு ஒன்றாக இருப்பதுடன் அது நிறுவனத்தின் நாளாந்த நடவடிக்கைகளை பயனுறுதிமிக்க வகையிலும் வினைத்திறனாகவும் முன்னெடுப்பதற்கு உதவுகிறது. வணிகச் செயற்பாடுகளை சீரான முறையில் முன்கொண்டு செல்வதற்கு, அதிகாரம் முறையாகக் கையளிக்கப்படல் வேண்டும்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) தொழிற்பாட்டு முகாமைத்துவத்தின் நான்கு (04) பிரதான செயற்பாடுகளை (functions) **இனங்காண்க.** (02 புள்ளிகள்)

(b) தற்காலச் சூழலில் தொழிற்பாட்டு முகாமைத்துவத்தில் பயன்படுத்தப்படுகின்ற இரண்டு (02) புதிய தொழினுட்பங்களைக் (technologies) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(c) அதிகாரக் கையளிப்பின் அனுகூலங்கள் மூன்றினை (03) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

கோவிட் - 19 நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட புதிய சுகாதார வழிகாட்டல்கள், நிறுவனங்களினுள் புதிய கட்டுப்பாடுகளின் தொகுதியை உருவாக்கியிருக்கிறது. இத்தகைய கட்டுப்பாடுகள் குறித்து தமது ஊழியர்களுக்கு அறிவிப்பதற்கு முகாமையாளர்கள் பல்வேறு தொடர்பாடல் முறைகளைப் பயன்படுத்த இது வழியமைக்கிறது. ஆனால் பெரும்பாலான நிறுவனங்களின் சில ஊழியர்கள் இந்த வழிகாட்டல்களைக் கடைப்பிடிக்கவில்லை, ஏனெனில் அத்தகைய வழிகாட்டல்கள், குறித்த நிறுவனங்களால் அதன் ஊழியர்களுக்கு பயனுறுதிமிக்க வகையில் தொடர்பாடப்படவில்லை.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) ஒரு நிறுவனத்திற்கான பயனுறுதிமிக்க தொடர்பாடலால் (effective communication) பெற்றுக் கொள்ளக்கூடிய இரண்டு (02) நன்மைகளைப் **பட்டியலிடுக.** (02 புள்ளிகள்)

(b) கட்டுப்படுத்தல் செயன்முறை ஒன்றின் பிரதான படிமுறைகளைக் (steps) **கூறுக.** (04 புள்ளிகள்)

(c) புதிய சுகாதார வழிகாட்டல்கள் காரணமாக கட்டுப்படுத்தல் மேற்கொள்ளப்படும்போது ஒரு நிறுவனம் கவனத்தில் கொள்ள வேண்டிய இரண்டு (02) காரணிகளை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

சந்தைப்படுத்தல் ஒரு நிறுவனத்தில் பிரதான பங்கை வகிக்கிறது. ஒரு நிறுவனத்தின் வெற்றி அல்லது தோல்வியானது அது பயன்படுத்துகின்ற சந்தைப்படுத்தல் நுட்பங்களின் தரத்தைப் பொறுத்தது. எனவே, நிறுவனங்கள், நிறுவனத் தந்திரோபாயங்களை உருவாக்கும்போது தனது சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை முறையாகக் கையாளுதல் வேண்டும். பெரும்பாலான நிறுவனங்கள் தங்களது பிரதான சந்தைப்படுத்தல் நடவடிக்கை ஒன்றாக அதன் "பண்டக்குறியிடல் (branding)" இற்கு மிகவும் முக்கியத்துவம் வழங்குகின்றன.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) சந்தைப்படுத்தல் கலவையின் (4Ps) நான்கு (04) மாறிகளை (variables) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) வெற்றிகரமான பண்டக்குறி ஒன்றின் இரண்டு (02) தேவைப்பாடுகளைக் (requirements) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(c) ஒரு வணிக நிறுவனத்திற்கு பண்டக்குறியிடல் ஏன் முக்கியமானது என்பதற்கான மூன்று (03) காரணங்களை (reasons) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B நிறைவு*

## பகுதி C

(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 07

**சுசந்த** என்பவர் ஒரு மட்பாண்ட வியாபாரி ஆவார். அவர் தனது வியாபாரத்தை பரம்பரை வழியில் தனது தந்தையிடமிருந்து பெற்றுக் கொண்டார். அவர் தனது பாரம்பரிய வியாபாரத்தை ஒரு குறிப்பிட்ட அளவிற்கு வெற்றிகரமாக வளர்த்தெடுத்துள்ளார். தனது தனிப்பட்ட தொடர்புகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளிலும் ஈடுபடும் ஒரேயொரு நபர் அவராவார். தற்போது தனது வியாபாரத்திற்காக ஒன்லைன் தளமொன்றை (online platform) நிறுவ அவர் திட்டமிட்டுள்ளார். ஆனால் தங்களுடைய வியாபாரத்திற்கு மேம்பட்ட தொழினுட்பத்தைப் பயன்படுத்துவது தொடர்பில் **சுசந்தவின்** தந்தை, **சுசந்தவுடன்** உடன்படவில்லை.

வியாபாரத்திற்கான தந்திரோபாயத் திட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்கான முன்முயற்சிகளை **சுசந்த** எடுத்துள்ளார். இந்த வியாபாரத்திற்கான அவரது தந்திரோபாயமாக இருப்பது "கட்டளைக்கு (ஓடருக்கு) செய்வது" என்பதன் மீது அதிக கவனம் செலுத்தும் வியாபாரமாக இதனை மாற்றுவதாகும். இலத்திரனியல் வர்த்தகம் மற்றும் சமூக ஊடகத் தளங்கள் ஆகியவை **சுசந்த** அறிமுகப்படுத்தத் திட்டமிட்டுள்ள சில புதிய முயற்சிகள் ஆகும்.

தமது வேலையை இழக்கும் அபாயம் உள்ளதன் காரணமாக அன்றாடம் கூலித் தொழில் செய்யும் பணியாளர்களுக்கு **சுசந்தவினால்** திட்டமிடப்பட்ட மாற்றங்கள் அதிக தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. மேலும், பணியில் ஈடுபடும் சில சிரேட்ட ஊழியர்கள் இந்த மாற்றங்கள் தொடர்பில் அதிருப்தி அடைந்துள்ளனர். இலங்கையின் பாரம்பரிய வியாபாரங்களை ஊக்குவிப்பதற்கு இலங்கை அரசாங்கமும் முயற்சிகளை எடுத்திருப்பதன் காரணத்தால், புதிய கேள்விகளைப் பூர்த்தி செய்வதற்காக தமது வியாபாரத்திற்கு திறன்மிக்க ஊழியர்களை ஆட்சேர்ப்பதற்கு **சுசந்த** திட்டமிட்டுள்ளார்.

ஊழியர்கள் மாற்றத்தை எதிர்ப்பதால், புதிய மாற்றங்கள் பற்றியும் ஏன் அந்த மாற்றங்கள் தேவையானது என்பது பற்றியும் விளக்குவதற்காக அனைத்து ஊழியர்களையும் இலக்காகக் கொண்ட வேலைப்பட்டறை (workshop) ஒன்றை நடத்துவதற்கு **சுசந்த** தீர்மானித்துள்ளார்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) **சுசந்தவின்** வியாபாரத்திற்குப் பயன்படுத்தக்கூடிய டிஜிடல் சந்தைப்படுத்தல் வழிமுறைகள் மூன்றினை (03) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) **சுசந்த** தனது வியாபாரத்திற்கான தந்திரோபாயத் திட்டம் ஒன்றை உருவாக்கும்போது சூழல் பகுப்பாய்வு **சுசந்தவால்** எவ்வாறு கவனத்தில் கொள்ளப்படலாம் என்பதை PESTEL பகுப்பாய்வைப் பயன்படுத்தி **விபரிக்குக.** (08 புள்ளிகள்)

(c) மனித வள மிகையைச் (surplus) சமாளிப்பதற்கான நான்கு (04) தந்திரோபாயங்களை (strategies) **இனங்காண்க.** (04 புள்ளிகள்)

(d) மாற்றத்திற்கான தடைகளைச் சமாளிக்க **சுசந்த** பயன்படுத்தக்கூடிய இரண்டு (02) வழிமுறைகளை (ways) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(e) வெற்றிகரமான நவீன தலைவர் (modern leader) ஒருவரின் பண்புகள் (characteristics) மூன்றைக் (03) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C நிறைவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| அறிவு (1) | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| முற்றடக்கம் (2) | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பிரயோகம் (3) | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பகுப்பாய்வு (4) | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |